> கடந்துபோன கடந்தகாலத்தை மாற்ற முடியாது. நிகழ்காலம் நொடிப்பொழுதில் மறைந்துவிடும். ஆனால், உங்கள் விருப்பப்படி உருவாக்கப்படக்கூடிய வருங்காலம் எப்போதுமே இருக்கும்.
>
> எஸ் ராஜரத்தினம், சிங்கப்பூரின் முதல் வெளியுறவு அமைச்சர்
> தேசிய இளையர் மாநாட்டின் தொடக்கவிழாவில் ஆற்றிய உரை, 16 ஜூலை 1982



# நாளைய வளப்பத்திற்கு வித்திடுகிறோம்

தெமாசெக் ஆய்வு முக்கிய கூறுகள் 2018
31 மார்ச் 2018 நிலவரப்படி

## தெமாசெக்கின் நிதி உள்ளீடுகளும் வழங்கீடுகளும்

நாங்கள் ஈடுபாடுமிக்க முதலீட்டாளராகவும், முன்னோக்குள்ள நிறுவனமாகவும், நம்பகமான பொறுப்பாளராகவும் எங்களது சொத்துகளுக்கு உரிமையேற்று நேர்மையோடும் துணிச்சலோடும் நிர்வகிக்கிறோம்

### எங்களின் நிதி ஆதாரங்கள்

**முதலெடுப்புகள்**

சொத்து விற்பனையின் நிகர ஆதாயமே எங்களது முக்கிய நிதி ஆதாரமாகும்.

எங்களின் முதலெடுப்புகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டுக்குச் சராசரியாக S$18 பில்லியனாக இருந்தது.

**லாப ஈவுகளும் பங்கீடுகளும்**

எங்களது முதலீட்டுப் பட்டியலிலுள்ள நிறுவனங்களிலிருந்து லாப ஈவு கிடைக்கிறது. நிதிகளில் செய்யும் முதலீடுகளுக்குப் பெரும்பாலும் ரொக்க ஆதாயப் பங்கீடுகள் கிடைக்கின்றன.

எங்களின் லாப ஈவுகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டுக்குச் சராசரியாக S$8 பில்லியன்.

**வங்கி கடன்கள்**

குறிப்பிட்ட சில தேவைகளுக்கு நாங்கள் வங்கிகளிலிருந்தும் கடன் வாங்கக்கூடும்.

**எங்களது பங்குதாரர்**

எங்களது பங்குதாரரான நிதி அமைச்சர்[1], புதிய மூலதனம் அல்லது சொத்துகள்[2] வழங்கக்கூடும்.

**கடன் பத்திரங்கள்**

AAA/Aaa

எங்களது தெமாசெக் முறிகள் எங்களுக்கு நீண்டகால நிதி அளிக்கும் அதே வேளையில், குறுகியகாலத் தேவைகளுக்கு எங்களின் யூரோ வணிகப் பத்திரம் கைகொடுக்கிறது.

TEMASEK

### எங்களின் நிதிப் பயன்பாடு

**முதலீடுகளும் அதைச் சார்ந்த செலவுகளும்[3]**

மேம்பட்ட, அறிவார்ந்த, நன்கு இணைக்கப்பட்ட உலகின் உருவாக்கத்திற்குப் பங்களிக்கும் நீண்டகாலப் போக்குகளில் நாங்கள் முதலீடு செய்கிறோம்.

கடந்த ஐந்து ஆண்டுகளில், எங்களின் முதலீடுகள் ஆண்டுக்குச் சராசரியாக S$26 பில்லியன்.

**பங்குதாரர்களுக்கு லாப ஈவுகள்**

எங்களது நிதிக் கட்டொழுங்கின் ஒரு பகுதியாக, எங்களது பங்குதாரரான நிதி அமைச்சருக்கு[1] நாங்கள் லாப ஈவுகள் செலுத்துகிறோம்.

2000 முதல் 2015 வரை, நிகர முதலீட்டு வருமானம் (NII[5]) என்றும் அறியப்படும் எங்களது லாப ஈவுகளில் 50% வரை, சிங்கப்பூர் அரசாங்கத்தால் செலவு செய்யப்பட்டிருக்கலாம்.

இந்தப் பங்களிப்பு, 2014-ம் ஆண்டின் முன்னோடித் தலைமுறையினர் உதவித் தொகுப்புக்கு நிதியளிக்க உதவியது.

**வரிகள்**

நாங்கள் பல்வேறு நாடுகளில் வரிகள்[4] செலுத்துகிறோம்.

இந்த வரிகள், அந்தந்த நாடுகளின் பொதுச் சேவைகளுக்கு நிதியளிக்க உதவுகின்றன அல்லது அவற்றின் உபரியிலும் சேமிப்புநிதியிலும் சேர்க்கப்படுகின்றன.

**சமூகத்திற்கான அறக்கட்டளைகள்**

நாங்கள், அறக்கட்டளை அன்பளிப்புகள் மற்றும் நன்கொடைகள் மூலமாக நமது சமூகத்தில் முதலீடு செய்கிறோம்.

MOF

எங்களது நிதிகளில் பெரும்பகுதி எங்களின் முதலீட்டுப் பட்டியலிலிருந்து கிடைக்கிறது

**நாங்கள் நிர்வகிக்காதவை**

- சிங்கப்பூர் மத்திய சேமநிதி சேமிப்புகள்
- சிங்கப்பூர் அரசாங்க சேமிப்புநிதி
- சிங்கப்பூர் வெளிநாட்டு சேமிப்புநிதி

**நிகர முதலீட்டு வருமானத்திலிருந்து (NII[5]) நிகர முதலீட்டு வரவிலிருந்து (NIR[6]) பங்களிப்புகள்[7]**

2016 முதல், NIR[6] சட்டமைப்புக்கு தெமாசெக் மாறியது.

எங்களது எதிர்பார்க்கப்படும் நீண்டகால வரவுகளில் பாதி வரை, பணவீக்கம் கழித்து, சிங்கப்பூர் அரசாங்கத்தால் வரவுசெலவுத் திட்டச் செலவினத்திற்குப் பயன்படுத்தப்படலாம்.

2018-ம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டத்தில் 18% ஆக இருக்கும் NII/NIR பங்களிப்பே செலவினத்திற்கான ஆகப்பெரிய ஆதாரமாகத் தற்போது விளங்குகிறது.

1 சிங்கப்பூர் நிதி அமைச்சர் (இன்கார்ப்பரேஷன்) சட்டம் (அத்தியாயம் 183)-ன்கீழ், நிதி அமைச்சர் என்பது சிங்கப்பூர் அரசாங்கத்தின் சார்பில் நிறுவனங்களில் பங்குரிமை வைத்திருக்கும் ஒரு நிறுவன அமைப்பாகும்.

2 1974-ல் தெமாசெக்கை அமைக்க 35 நிறுவனங்களிலிருந்த S$354 மில்லியன் ஆரம்ப முதலீட்டுப் பட்டியல் இதில் உள்ளடங்கும்.

3 சார்ந்த செலவுகளில் தொழிற்பாட்டு மற்றும் நிதியளிப்பு செலவுகள்: உரிய பொறுப்புகள், சட்டம், தணிக்கை, ஆலோசனை, இதர கட்டணங்கள் போன்ற பரிவர்த்தனைச் செலவுகள்; நிதிகளுக்கான நிதி நிர்வாகக் கட்டணங்கள்; மற்ற தொழிற் செலவுகள் ஆகியவை உள்ளடங்கும்.

4 வரி செலுத்துவதிலிருந்து அரசுரிமை விதிவிலக்கு கோரக்கூடிய மற்ற அரசாங்க நிதிகளைப் போலல்லாமல், லாபம் ஈட்டும் வழக்கமானதொரு நிறுவனத்தைப் போலவே தெமாசெக் வரி செலுத்துகிறது.

5 NII எனப்படும் நிகர முதலீட்டு வருமானத்தில் லாப ஈவுகளும் வட்டி வருமானமும் உள்ளடங்கும்.

6 NIR எனப்படும் நிகர முதலீட்டு வரவுகள், நிகரச் சொத்துகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் நீண்டகால வரவு விகிதத்தை, பணவீக்கம் கழித்து, அடிப்படையாகக் கொண்டது.

7 சிங்கப்பூர் நாணய ஆணையமும் அரசாங்க முதலீட்டு நிறுவனமும் 2009-ல் இருந்து நிகர முதலீட்டு வரவுகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தெமாசெக்கின் நிதி உள்ளீடுகளையும் வழங்கீடுகளையும் ஆராய ஒளிவருடல் செய்யுங்கள் அல்லது **www.temasekreview.com.sg/insandouts_tms** இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்

## ஒரு மாற்றத்தை உருவாக்குகிறோம்

தெமாசெக், ஒரு முதலீட்டாளராகச் சிறப்பாகச் செயல்படவும், ஒரு நிறுவனமாகச் சரியானதைச் செய்யவும், ஒரு பொறுப்பாளராகப் பல தலைமுறைகள் உள்ளடங்கும் பரந்த சமூகத்திற்கு நன்மை புரியவும் முனைப்புடன் முயற்சி எடுக்கிறது.

18 அறக்கட்டளைகள்
6 அறநிறுவனங்கள்
1 நிலையம்
1 அறநிதி

**விளையாட்டு ஆற்றல் திட்டம்** (TEMASEK FOUNDATION Cares)

தொண்டூழியர்களும் இயலாமை உள்ளவர்களும் விளையாட்டு ஆற்றல் திட்டத்தின்கீழ் வாரந்தோறும் ஒன்றுகூடி விளையாட்டுகளிலும் கேளிக்கையான பொழுதுபோக்குகளிலும் ஈடுபடுகிறார்கள்.

காணொளியைக் காண ஒளிவருடல் செய்யுங்கள் அல்லது **www.temasekreview.com.sg/playability_tms** இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்

**கற்றல் கேளிக்கையானது, உற்சாகமளிப்பது (LIFE) திட்டம்** (TEMASEK FOUNDATION NURTURES)

LIFE திட்டத்தின்கீழ், நன்னெறிகளை மையமாகக் கொண்ட பாடத்திட்டத்தின் துணையுடன், மாணவர் பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர்கள் வாழ்க்கைத் திறன்களைக் கற்றுக் கொள்கிறார்கள்.

**இளம் சமுதாயத் தலைவர்களுடன் கருத்துப் பரிமாற்றம்** (TEMASEK FOUNDATION CONNECTS)

மாற்றத்தை உருவாக்கவல்ல இளையர்கள் உலகெங்கிலுமிருந்து ஒன்றுதிரட்டப்பட்டு, சமுதாயத்தை வலுப்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராயும் கலந்துரையாடலில் மற்ற தலைமுறையினருடன் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

**உணவுக் கழிவைக் குறைக்கும் முயற்சி** (TEMASEK FOUNDATION ecosperity)

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக அறிவியலாளர்களும் உள்ளூர் விவசாயிகளும் உணவுக் கழிவை உரமாகவும் விலங்குத் தீவனமாகவும் மறுசுழற்சி செய்வதற்காக "Black Soldier" ஈக்களை வளர்க்கின்றனர்.

**பல்வகை போக்குவரத்துத் திட்டம்** (TEMASEK FOUNDATION International)

இந்தியாவின் புனே நகரில் அறிமுகமாகியுள்ள இத்திட்டம், பல்வகை போக்குவரத்திலும் மெட்ரோ இரயில் போக்குவரத்திலும் ஈடுபட்டுள்ள சுமார் 100 பொது அதிகாரிகளை எட்டிச்சென்று, நகரமயப் போக்குவரத்து முறைக்கான பெருந்திட்டம் வகுப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

**ஆசிய பொறுப்பாண்மை வட்டமேசை மாநாடு 2018** (STEWARDSHIPASIA)

பொறுப்பாண்மை கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் வளர்க்கும் நோக்கத்துடன், நிறுவனங்கள் மற்றும் குடும்பத் தொழில்களின் தலைவர்களையும், முதலீட்டாளர்களையும், நிறுவனங்களையும் ஒன்றுகூட்டுகிறது.

**இறுதிக்கட்டச் சிறுநீரக நோய்க்கான தீர்வு** (TEMASEK FOUNDATION INNOVATES)

சிறுநீரக நோயின் இறுதிக்கட்டத்திலுள்ள நோயாளிகள் மாற்றுவகை சிகிச்சைகளை ஆராயவும் புரிந்துகொள்ளவும் உதவி புரிய, டியூக்-என்யுஎஸ் மருத்துவப் பள்ளியின் மருத்துவ ஆய்வாளர்கள் ஆய்வு நடத்துகின்றனர்.

**TEMASEK TRUST**

தெமாசெக் மற்றும் இதர நன்கொடையாளர்களின் அன்பளிப்புகளும் அறக்கட்டளைகளும் நிதி கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகின்றன

**TEMASEK FOUNDATION** Management Services

நிர்வாகச் சேவைகள், அறிவுப் பகிர்வு

**சமூக முதலீட்டுக்கான கட்டளை**

- மக்களை வளர்க்கிறோம்
- சமூகங்களை நிர்மாணிக்கிறோம்
- திறன்களை வளர்க்கிறோம்
- வாழ்க்கையைச் சீர்ப்படுத்துகிறோம்

**அறிவுத்திரட்டு நிலையங்கள்**

Wealth Management Institute — நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்திற்கு 2017-ல் தெமாசெக் அன்பளிப்பாகக் கொடுத்தது.

SMU Singapore Management University — Sim Kee Boon Institute for Financial Economics

இலவச ஆதார நிதியளிப்பு

**TEMASEK** மற்றும் இதர நன்கொடையாளர்கள்

நிறுவன ஆதரவு

தெமாசெக்குடன் கூட்டு முதலீடு

அறக்கட்டளைகளும் அன்பளிப்புகளும்

**ஊழியர் தொண்டூழிய முனைப்பு**

TOUCH Today Towards Tomorrow



மனநல மருத்துவ நிலையத்தில் தங்கியிருக்கும் சிம் கா லிம், 2018 ஜூன் மாதம் தனது முதல் ஓவியக் கண்காட்சியை நடத்த டி-டச் அறப்பணி அமைப்பின் தொண்டூழியர்கள் ஒன்றுசேர்ந்து உதவி புரிந்தனர்.

காணொளியைக் காண ஒளிவருடல் செய்யுங்கள் அல்லது **www.temasekreview.com.sg/t-touchpainting_tms** இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்

தெமாசெக் அறநிறுவனங்கள் பற்றி மேலும் விவரமறிய ஒளிவருடல் செய்யுங்கள் அல்லது **www.temasekreview.com.sg/touchinglives_tms** இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்

@Temasek | Temasek | Temasek | Temasek Digital | @temasekseen

தெமாசெக் ஆய்வு 2018-ன் விவரங்களை **temasekreview.com.sg** இணையத்தளத்தில் படிக்கலாம்.

TEMASEK